26.09.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.136/2024</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சல்சா | | |
| க /பெ | சுரேஷ் | | |
| கிராமம் | தும்பூர் தாங்கல் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 38/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 26.09.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சுரேஷ் என் கணவர் ஆவார். அ.சா.1 ரமேஷ் எனது மூத்தார் ஆவார். அ.சா.2. கிருஷ்ணன் எனது மாமனார் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது, என் கணவர் சுரேஷ் தலையில் வலி இருப்பதாக சொன்னதன் பேரில் நானும் என் மாமனார் கிருஷ்ணனும், மூத்தார் ரமேஷும், என் கணவர் சுரேஷை விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். தலையில் வலி இருப்பது சம்பந்தமாக அவரிடம் கேட்க அவர் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. இருந்தும் என் மூத்தார் ரமேஷ் அவருடன் மருத்துவமனையில் இருந்த போது, கெடார் காவல் நிலைய போலீசார் என் மூத்தார் ரமேஷிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்று சென்றார்கள். இதற்கு முன்பு எங்களுக்கும், வேறு யாருக்கும் முன் விரோதம் எதுவும்

இல்லை. வேறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை. அதன் பிறகு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது கணவர் சுரேஷ் 2 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவரது பிரேதத்தை பெற்று, முறையாக இறுதி சடங்குகள் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் அதன்பிறகும் என் மூத்தாரிடம் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது. )

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

எங்களுக்கும், என் மாமனாரின் மைத்துனர் மகன்களான எதிரிகளுக்கும், வீடு கட்டி கொடுப்பது சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், அதை மனதில் வைத்துக் கொண்டு கடந்த 01/10/2021 அன்று மாலை 4.00 மணியளவில் என் மூத்தார் ரமேஷ், முரளி என்பவரின் வீட்டின் எதிரில் சென்றார் என்றும், அப்போது ஜெயக்குமாரும், செல்வகுமாரும் தகராறு செய்தார்கள் என்றும், ஜெயக்குமார் எனது மூத்தார் ரமேஷின் வயிற்றில் கடித்துவிட்டார் என்றும், அதைக் கேட்க வந்த என் கணவர் சுரேஷை இருவரும் சேர்ந்து தாக்கினார்கள் என்றும், பின்பு செல்வகுமார் கீழே கிடந்த ரப்பர் ஓஸ் பைப்பை எடுத்து சுரேஷின் பின்தலையில் அடித்துவிட்டார் என்றும், பின் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மறித்து விட்டதால் என் கணவர் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றும், அன்று இரவு (02/10/2023 அதிகாலை 3.00 மணியளவில்) என் கணவர் சுரேஷ் தலையில் வலி இருப்பதாக கூறியதன் பேரில், அவரை முண்டியம்பாக்கம் அழைத்து சென்று நானும், எனது மாமனாரும், எனது மூத்தார் ரமேஷும் சேர்த்தோம் என்றும், அவர் சிகிச்சையில் இருந்தார் என்றும், அப்போது உடன் இருந்த ரமேஷிடம் கெடார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள், இந்த சம்பவம் குறித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நடந்தவைகளை சொல்லிக் கொண்டேன் என்றும், பின்பு 03/10/2023 ம் தேதி காலை 10-15 மணியளவில் என் கணவர் சுரேஷ் சிகிச்சை பலனின்றி அதே மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் மறு விசாரணை செய்தார்கள் என்றும், தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: -

எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்று நான் போன் செய்து தகவல் சொன்ன பிறகுதான் எனது மூத்தார் ரமேஷ் வீட்டிற்கு வந்தார் என்றால் நான் சென்று அவரை நேரில் அழைத்து வந்தேன். என் வீட்டுக்காரர் தலை வலிக்கிறது என்று என்னிடம் சொன்னார். வேறு எந்த விவரமும் சொல்லவில்லை. என் கணவர் உள்ளூரிலும் வேலைக்குப் போவார். வெளியூரிலும் வேலைக்குப் போவார். என் கணவருக்கு ரத்த கொதிப்பு உள்ளது. உயர் ரத்த அழுத்த மாத்திரை போடுவார். என் கணவர் எப்போதாவது மது அருந்துவார். என் கணவர் தலைவலி என்று சொல்லி இறந்துவிட்டார். வேறு எதனால் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை**

**இல்லை**